**செ.வெ. எண்: 111** **நாள்: 03.02.2012**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (3.2.2012) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தை தாக்கிய ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் தலைவர் (கட்டுமானப் பிரிவு) திரு. எஸ்.என். சுப்பிரமணியன் அவர்கள், லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் சார்பாக 2 கோடியே 35 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது, லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. ஆர். அன்பழகன் உடனிருந்தார்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 67 கோடியே 79 லட்சத்து 31 ஆயிரத்து 643 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 3.2.2012